# தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைத்தவர்கள்!

# டெல்லி ஆட்டுவித்தபடி ஆடும் அடிமை அ.தி.மு.க.!

## பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு – கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, ஏப்.14 –**

**‘தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்தவர்களை – டெல்லி ஆட்டுவித்தபடி ஆடுபவர்களை அடிமை என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது’ என்று அ.தி.மு.க. பற்றி பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.**

**பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பேட்டி வருமாறு:–**

**கேள்வி:** *தி.மு.க. தேர்தல் அட்டவணையை தேர்தல் ஆணையம் அறிவிப்பதற்கு முன்பே மாநாடுகள் / கூட்டங்களை நடத்தத் தொடங்கியது. உங்கள் தீவிரமான தொடர்ச்சியான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக நீங்கள் மக்களை பெருமளவில் சந்தித்து வருகிறீர்கள். உங்களுக்கு என்ன உணர்வு? தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முன்னேற்றக் கூட்டணி எத்தனை இடங்களை வெல்லும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

**கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தேர்தல் என்று வந்தாலே எப்போதும் தி.மு.க.தான் களத்தில் முந்தி நிற்கும். அதேபோலதான் இந்த தேர்தலிலும் ஓராண்டுக்கும் முன்பே தேர்தல் பணிகளைத் தொடங்கிவிட்டோம். ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமை தொகை, விடியல் பயணம், புதுமைபெண், தமிழ்ப் புதல்வன், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், 2 லட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு உள்ளிட்ட எண்ணற்ற நலத்திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளோம். அந்த உரிமையில் மக்களை சந்தித்து ஆதரவு கேட்கிறோம் . மக்கள் எங்கள் மீது அளவு கடந்த அன்பும், நம்பிக்கையும் வைத்துள்ளனர். மக்களின் ஆதரவோடு 200 தொகுதிகளுக்கு மேல் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்போம். அதில் எந்த சந்தேகமுமில்லை.

### மனதிற்கு நெருக்கமான திட்டங்கள்

**கேள்வி:** *உங்கள் அரசாங்கம் செயல்படுத்தி வரும் பல நலத்திட்டங்களில், உங்களுக்கு மிகுந்த திருப்தி அளித்த ஒரு திட்டத்தின் பெயரைச் சொல்ல முடியுமா?*

**மு.க.ஸ்டாலின்:** திராவிட மாடல் ஆட்சியில் நாங்கள் நிறைவேற்றிய அத்தனை திட்டங்களும் மிக முக்கியமான திட்டங்கள் தான். இருந்த போதும் நீங்கள் கேட்பதால் சொல்கிறேன்... பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி இருந்தாலும் இரண்டு திட்டங்கள் என் மனதிற்கு நெருக்கமான திட்டங்கள். ஒன்று குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் அளிக்கும் மகளிர் உரிமைத் திட்டம். இந்த திட்டத்தை நாங்கள் முதன்முதலில் வாக்குறுதியாக அறிவித்த போது ‘இதை செயல்படுத்தவே முடியாது, தேர்தலுக்காக அறிவித்தது’ என எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்தன. ஆனால் இன்று இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டப்பட்ட திட்டமாக மகளிர் உரிமைத்தொகை திட்டம் இருந்து வருகிறது. யாரெல்லாம் அன்று விமர்சித்தார்களோ, அவர்களே இன்று எங்களின் திட்டத்தை அவர்கள் கட்சி ஆளும் மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றனர். அடுத்து அமையவுள்ள எங்களின் ஆட்சியில் இந்த உரிமைத் தொகையை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்க உள்ளோம். இந்தத் திட்டம் வரலாற்றில் மிக முக்கிய திட்டமாக இடம்பெறும்.

அதேபோல என் இதயத்திற்கு நெருக்கமான மற்றொரு திட்டம் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான செலவு மற்ற திட்டங்களைவிட குறைவு தான். ஆனால் அதன் பலன் அளவிட முடியாதது. ஒரு குழந்தைகூட பசித்த வயிறோடு பள்ளியில் இருக்கக் கூடாது என உடனடியாக பள்ளிகளில் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அடுத்து அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்தோம். இப்ப அடுத்து வரவுள்ள எங்களது ஆட்சியில் 8-ஆம் வகுப்புவரை விரிவுபடுத்த உள்ளோம். இப்போது பசித்த வயிறுடன் ஒரு குழந்தைகூட பள்ளிக்கு வருவதில்லை என்ற நிலையை உருவாக்கி உள்ளோம். குழந்தைகளின் வயிறு நிறைந்து, நன்றாகப் படிக்கிறார்கள். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதில் உண்மையிலேயே என் மனம் நிறைவாகி இருக்கிறது.



**கேள்வி:** *காங்கிரஸுடன் இடஒதுக்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் தி.மு.க. எதிர்கொண்ட சவால்கள், பல தசாப்தங்களில் மிகக் கடினமானவையாகக் கருதப்படுமா? குறிப்பாக, காங்கிரஸின் ‘அதிகாரத்தில் பங்கு’ கோரிக்கையை உள்ளடக்கிய ஆரம்ப கட்டம்? அது மற்ற கட்சிகளுடனான இடஒதுக்கீடு பேச்சுவார்த்தைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது போலவும், அதைவிட முக்கியமாக அண்டை மாநிலமான புதுச்சேரியில் இந்தியா கூட்டணி முற்றிலும் சிதைவடைந்த நிலைக்கு சென்றது போலவும் தோன்றியது.*

**மு.க.ஸ்டாலின்:** வழக்கமாக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையின் போது நடக்கும் நிகழ்வுகள் தான். சுமுகமாகப் பேச்சுவார்த்தைகள் முடிந்து, கூட்டணிக் கட்சியின் தலைவர்களும் – தொண்டர்களும், கூட்டணியின் வேட்பாளர்களின் வெற்றிக்காக களத்திற்கு வந்துவிட்டோம். 2019 முதல் இருந்து வரும் எங்களின் வலுவான கூட்டணியில் புதிய கட்சிகளும் சேர்ந்துள்ளன. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு மேலும் வலு சேர்த்துள்ளது. தமிழ்நாடு மட்டுமல்ல; புதுச்சேரியிலும் எங்கள் கூட்டணி மகத்தான வெற்றி பெறும்.

**கேள்வி:** *தி.மு.க. வலுவாகவும், சீராகவும் முன்னேறி வருகிறது என்று பார்க்கப்படும் நிலையில், தி.மு.க. கூட்டணியில் தி.மு.க. - தேசிய முற்போக்கு திராவிட கழகத்தை (DMDK) இணைத்துக் கொண்டு, 10 இடங்களை - மேலும் ஒரு ராஜ்யசபா இடத்தையும் - வழங்கியதன் மூலம் தி.மு.க. எந்த செய்தியை வெளிப்படுத்தியுள்ளது? உங்கள் கருத்து?*

**மு.க.ஸ்டாலின்:** மக்களாட்சியின் மாண்பைக் காத்தும் – கூட்டணிக் கட்சியினரை மதித்து அரவணைத்தும் நடப்பது தான் எங்களது பாணி. இதைப் பார்த்து, மக்கள் நலனிலும் மாநில உரிமைகளிலும் அக்கறை கொண்டுள்ள தே.மு.தி.க. போன்ற இயக்கங்கள் எங்களோடு கூட்டணி அமைக்கின்றன.

### அமலாக்கத்துறை அரங்கேற்றிய திருவிளையாடல்கள்!

**கேள்வி:** *TASMAC-இல் ரூ.1,000 கோடி ஊழல், சுமார் ரூ.4,730 கோடி மதிப்பிலான சட்டவிரோத மணல் சுரங்கம், அமைச்சர்களைச் சார்ந்த குற்றச்சாட்டுகள் போன்றவை — அனைத்தையும் அமலாக்க இயக்குநரகம் (ED) எடுத்துக்கொண்டுள்ளது — இவற்றுக்கு சட்ட அடிப்படை உள்ளதா இல்லையா? குற்றச்சாட்டுகளை மத்திய அமைப்பு விசாரிப்பதில் தவறு ஏதாவது உள்ளதா? திமுக தனது ஆட்சி பாஜகவால் ED-ஐ தவறாக பயன்படுத்தி குறிவைக்கப்படுகிறது என்று உணருகிறதா?*

**மு.க.ஸ்டாலின்:** அமலாக்கத்துறையை தங்களின் ஏவல் துறையாக மாற்றி எதிர்க்கட்சிகளின் மீது பொய்யான வழக்குகளைப் புனைந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒடுக்க முயல்வதை தான் இந்த நாடே பார்த்து வருகிறதே! ஏன், உயர்நீதிமன்றங்களும் உச்சநீதிமன்றமும் பல வேளைகளில் அமலாக்கத் துறையை கடுமையாக கண்டித்ததைப் பார்த்தோமே!

நீங்கள் குறிப்பிட்டதெல்லாம், ஒன்றிய பா.ஜ.க.வின் தயாரிப்பில் அமலாக்கத் துறை அரங்கேற்றிய திருவிளையாடல்கள்!

### எடப்பாடியின் கற்பனைக் கதைகள்!

**கேள்வி:** *எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி கூறிய ‘தமிழ்நாட்டை ஆளுவதில் முதலமைச்சரின் குடும்பம் அதிகார மையங்களாக செயல்படுகிறது’ என்ற குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன?*

**மு.க.ஸ்டாலின்:** திராவிட மாடல் அரசின் நல்லாட்சியை – ஐந்தாண்டு சாதனைகளை, திசைதிருப்பச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் அவை. அவரது கற்பனைக் கதைகளுக்கு எல்லாம் பதில் கூற வேண்டியதில்லை.

**கேள்வி:** *வீட்டு உபயோகப் பொருட்களை வாங்க தி.மு.க. வாக்குறுதி அளித்த ரூ.8,000 கூப்பன், அதிமுக அறிவித்த ‘இலவச குளிர்சாதனப் பெட்டி மற்றும் ரூ.10,000 உதவி’ திட்டங்களை சமநிலைப்படுத்தும் நோக்கத்துடன் கொண்டுவரப்பட்டதா? ரூ.8,000 கூப்பன் போன்ற திட்டங்கள் மாநிலத்தின் பொருளாதார செயல்திறனை குறைக்கும் வகையில் செயல்படக்கூடும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?*

**மு.க.ஸ்டாலின்:** 8000 ரூபாய்க்கான இல்லத்தரசி கூப்பன் திட்டம் தான், இன்றைக்கு தேர்தல் களத்தின் சூப்பர் ஸ்டார். பெண்கள் தங்கள் வீடுகளுக்குத் தேவையான – தாங்கள் விரும்பிய பொருளை விரும்பிய கடையில் வாங்கிக் கொள்ளும் இல்லத்தரசி கூப்பன் என்பது, ஒவ்வொரு இல்லத்தின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படும்.

மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை நாங்கள் அறிவித்து செயல்படுத்திய போதும் இதே கருத்தைத் தான் முன்வைத்தனர். ஆனால் இன்று இந்தியாவில் பல மாநிலங்கள் அந்தத் திட்டத்தை செயல்படுத்தியிருக்கின்றன. புதிதாகத் தேர்தலைச் சந்திக்கும் மாநிலங்களும், தேர்தல் வாக்குறுதியாக வழங்குகின்றன.

இப்போது இந்த ரூ.8000 இல்லத்தரசி கூப்பன் திட்டத்தையும் வெற்றிகரமாக செயல்படுத்துவோம். எழுதி வைத்துக் கொள்ளுங்கள் மகளிர் உரிமை தொகை

PRESS TRUST OF INDIA
India's largest and most trusted news agency since 1949

திட்டம் போல இந்தத் திட்டமும் இந்தியா முழுமைக்கும் வலம் வரும்.

### கொள்கை கோட்பாடு இல்லாத அ.தி.மு.க.

**கேள்வி:** *மூன்று முறை அ.தி.மு.க. முதலமைச்சராக இருந்த ஓ. பன்னீர்செல்வத்தை தி.மு.க.வில் சேர்த்துக் கொண்டது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது, மேலும் அவரது ஆதரவாளர்கள் அவர் அமைச்சர் அல்லது சபாநாயகர் ஆகப்போவார் என்று கூறி வருகின்றனர். தி.மு.க.க்கு எதிராக இருந்த பல தலைவர்கள் இறுதியில் தி.மு.க.வில் இணைந்துள்ளனர். இது குறித்து உங்கள் கருத்து?*

**மு.க.ஸ்டாலின்:** இன்றைய அ.தி.மு.க.வின் நிலை என்னவாக இருக்கிறது என்பதை ஊடகவியலாளர்களான நீங்கள் மட்டுமல்ல, நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். அந்தக் கட்சிக்கு கொள்கையும் இல்லை; கோட்பாடும் இல்ல. அந்தக் கட்சியின் தலைமைக் கழகமாக டெல்லி பா.ஜ.க.தான் இருக்கிறது.

அதனால் தான், அந்தக் கட்சியில் திராவிட இயக்க உணர்வோடு வளர்ந்தவர்கள், திராவிட இயக்கத்தின் தலைமகனாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கி வருகிறார்கள். அதே பாதையைத்தான் சகோதரர் ஓ.பன்னீர்செல்வம் அவர்களும் தேர்ந்தெடுத்து தி.மு.க.வில் இணைந்திருக்கிறார்.

**கேள்வி:** *தி.மு.க. ஆட்சி முதலீடுகளைப் பெற்றது, கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் (MoUs) மாற்று விகிதம், சட்டம் மற்றும் ஒழுங்கு பராமரிப்பு ஆகியவற்றில், எடப்பாடி பழனிசாமி தொடர்ந்து அரசாங்கத்தின் கூற்றுகளை எதிர்த்து வருகிறார். எதிர்க்கட்சித் தலைவர் 6,999 POCSO வழக்குகள்; ரூ.5 இலட்சம் கோடி கடன் சுமை என்று குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து உங்கள் கருத்து?*

**மு.க.ஸ்டாலின்:** “பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி”. இது ஒன்றே அ.தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு எடுத்துக்காட்டு. பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் கூட பாலியல் தொல்லைக்கு உள்ளான ஆட்சி, அ.தி.மு.க. ஆட்சி. தமிழ்நாட்டை எப்படி குட்கா கிடங்காக மாற்றி நாசப்படுத்தினார்களோ – அதேபோல் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கையே இல்லை என்ற நிலையையும் ஏற்படுத்திவிட்டுப் போனார்கள்.

ஆனால், தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் குட்கா உள்ளிட்ட போதை பொருட்களைக் கடுமையான நடவடிக்கைகள் மூலம் ஒழித்திருக்கிறோம். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றி மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுக்கும் துணிச்சலை பெண்களுக்கு உருவாக்கினோம். பணிபுரியும் பெண்களின் பாதுகாப்புக்கு தோழி விடுதிகள் உருவாக்கியிருக்கோம்.

பெண்களுக்கு எதிரான குற்றவழக்குகளில் மிக குறுகிய காலத்தில் தண்டனைகளை வாங்கிக் கொடுத்த ஆட்சிதான், தி.மு.க. ஆட்சி. அதுமட்டுமில்ல, பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனைகளை உரிய சட்டத் திருத்தங்களின் மூலம் கடுமையாக்கியுள்ளோம்.

இப்படி, பெண்களின் பாதுகாப்பை இந்த அரசு உறுதி செய்துள்ளதால்தான் பணிக்குச் செல்லும் பெண்கள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

மணிப்பூரை கலவர பூமியாக மாற்றியவர்களைக் கூட்டணியில் வைத்துக் கொண்டு, சட்டம் ஒழுங்கு பற்றியோ - பெண்கள்பாதுகாப்புபற்றியோபேசுவதற்கு பழனிசாமி அவர்களுக்கு கிஞ்சித்தும் தகுதியில்லை.

### பழனிசாமியின் திறனற்ற நிர்வாகம்!

தமிழ்நாட்டைக் கடனாளி மாநிலமாக விட்டுச் சென்றதே, பழனிசாமி என்பதை நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் வெளியிட்ட வெள்ளை அறிக்கையே சான்று. திறனற்ற நிர்வாகத்தால் மாநிலத்தின் நிதி நிலைமை, மூச்சுத்திணறி தவித்த நேரத்தில், அதனை சரிசெய்ய, ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்த ரகுராம் ராஜன் உள்ளிட்ட பொருளாதார அறிஞர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவை நியமித்து, அதன் பரிந்துரைகளைச் செயல்படுத்தி, நிதி நிலையைச் சீராக்கியதோடு, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 30 லட்சம் கோடியாக உயர்த்தி உள்ளோம். தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதத்தை 11.19% ஆக அதிகரித்து, No.1 மாநிலமாக தமிழ்நாட்டை வளர்த்தெடுத்துள்ளோம். ஆகவே, பழனிசாமி அவர்கள் நாள்தோறும் அள்ளித்தெளிக்கும் அவதூறுகள் எல்லாம் தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடாது.

**கேள்வி:** *மேற்கு வங்காளம் மற்றும் கேரளா போன்ற சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டால், இந்தியா கூட்டணிக்கு எதிர்காலம் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? மேலும், தேசிய அளவில் நீங்கள் மற்றும் உங்கள் கட்சி பெரிய பங்கு வகிக்கும் வாய்ப்பு இருக்கிறதா என்று நினைக்கிறீர்களா?*

**மு.க.ஸ்டாலின்:** முத்தமிழறிஞர் கலைஞர் சொன்னது போல என் உயரம் எனக்குத் தெரியும்.

**கேள்வி:** *திட்டமிடப்பட்ட தொகுதி மறுவரையறை (DELIMITATION) நடவடிக்கையில் உங்களுக்கு ஏன் அச்சங்கள் உள்ளன? அந்த பிரச்சினையை சமாளிக்க, உங்கள் ஆந்திரப் பிரதேச இணை நாயகன் என். சந்திரபாபு நாயுடு போல, தமிழர்களை அதிக குழந்தைகள் பெறுமாறு பரிந்துரைப்பீர்களா?*

**மு.க.ஸ்டாலின்:** ஒன்றிய அரசு திட்டமிடும் தொகுதி மறுசீரமைப்பால், தமிழ்நாடு பாதிக்கப்படும் என்று உணர்ந்தவுடன், தி.மு.க.தான் முதலில் உரிமைக்குரல் எழுப்பியது. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினோம்; அனைத்துக்கட்சித் தலைவர்களைக் கூட்டித் தீர்மானம் போட்டோம்; தென் மாநிலங்கள் உள்ளிட்ட பல்வேறு மாநில முதலமைச்சர்களுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டு கூட்டுக்குழு அமைத்து, அதன் முதல் கூட்டத்தில், 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி செய்யப்பட்ட தொகுதி மறுசீரமைப்பு, மேலும் 25 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட வேண்டும்; மக்கள்தொகை கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திய மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது என்று ஒன்றிய அரசை வலியுறுத்தினோம். மேலும், 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில் தற்பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மாநிலங்களுக்கிடையே எந்த விகிதத்தில் தொகுதிகளின் எண்ணிக்கை உள்ளனவோ, அதே விகிதத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களின் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்குத் தேவையான அரசியல் சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்து, “தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!” எனும் முழக்கத்தை முன்னெடுத்தோம். இதுதான் எங்களின் நிலைப்பாடு.

ஆனால், பா.ஜ.க. பின்வாசல் வழியாக நுழைந்திட வாக்குக் கேட்கும் பழனிசாமி அவர்கள் இதுநாள்வரை, தொகுதி மறுசீரமைப்பு குறித்து வாய்மூடி மௌனம் காப்பது தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் துரோகம்!

**கேள்வி:** *நாட்டில் சிறுபான்மையினரின் நிலைமை தற்போது எவ்வாறு உள்ளது? அவர்களின் நலன்களைப் பாதுகாக்கவும், தங்களின் மதச்சார்பற்ற தன்மையை நிலைநிறுத்தவும் திமுக போன்ற கட்சிகள் எவ்வாறு செயல்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?*

**மு.க.ஸ்டாலின்:** சிறுபான்மையினரை அச்சத்தில் வைப்பதுதான் பா.ஜ.க.வின் முக்கிய அஜெண்டா. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இசுலாமிய மக்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். இப்போது, கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கூட நிம்மதியாக கொண்டாட முடியாத சூழல் உண்டாகியிருக்கிறது; கிறஸ்துவ மக்களும் குறிவைக்கப்பட்டிருக்கிறார்கள். மணிப்பூரில் என்ன நடக்கிறது என்பதை இந்த நாடே பார்த்துக் கொண்டிருக்கிறது. சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பற்ற நிலை காட்டுத்தீயென நாடு முழுக்க பரவ வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் செயல்திட்டம்.

### ஆபத்துகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் முதல் இயக்கம் தி.மு.க.

அதனால்தான், முதலில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் கொண்டுவந்தார்கள். அடுத்து, வக்பு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்போது FCRA சட்டம் கொண்டுவர துடிக்கிறார்கள். இந்த மூன்றுக்குமே ஆதரவு கொடுத்து பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்திருக்கும் பழனிசாமி அவர்களுக்கு சிறுபான்மையினர் நலன் மீது துளியும் அக்கறை இல்லை. ஆனால், தி.மு.க.வோ, இந்தியா எப்போதும் மதச்சார்பற்ற நாடாகத் திகழ வேண்டும்; அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் சரிசமமாக மதிக்கப்பட வேண்டும்; சிறுபான்மையின மக்களுக்கு அரசியல்சட்டம் தந்துள்ள பாதுகாப்புகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் என்றைக்கும் உறுதியாக இருக்கிறோம். இவற்றுக்கான ஆபத்து எந்த வகையில் வந்தலும் – எங்கிருந்து வந்தாலும் அதை தடுத்து நிறுத்தும், அதற்கு எதிராக குரல் கொடுக்கும் முதல் இயக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும்.

**கேள்வி:** *பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதாவை மத்திய அரசு அவசரமாக முன்னெடுத்து வருகிறது என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஏன்?*

**மு.க.ஸ்டாலின்:** அவர்களுக்கு உண்மையில் மகளிர் இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதில் அக்கறை இல்லை. அப்படி இருந்தால் தற்போதே நடைமுறைப்படுத்தி இருக்கலாம் ஆனால் அதை விட்டு மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்வதற்கு வரும் எதிர்ப்பை மடைமாற்ற மகளிர் இடஒதுக்கீட்டை ஒரு ஆயுதமாக பயன்படுத்த நினைக்கிறார்கள். தொகுதி மறுவரையறையைக் காரணம் காட்டாமல் உடனே மகளிர் இட ஒதுக்கீட்டை செயல்படுத்த வேண்டும்.

### டெல்லி ஆட்டுவித்தபடி ஆடும் அடிமை!

**கேள்வி:** *பொதுவாக ஆட்சியில் இருக்கும் கட்சி எதிர்க்கட்சியிடமிருந்து விமர்சனங்களை எதிர்கொள்கிறது. ஆனால், திமுக அதிமுக என்ற முக்கிய எதிர்க்கட்சியை ‘அடிமை’ போன்ற கடுமையான சொற்களைப் பயன்படுத்தி மிகுந்த கடுமையாக விமர்சித்துள்ளது போல தெரிகிறது. இதுகுறித்து உங்கள் கருத்து?*

**மு.க.ஸ்டாலின்:** தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்தவர்களை, டெல்லி ஆட்டுவித்தபடி ஆடுபவர்களை அடிமை என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.